1969 பிப்ரவரி 26] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பதிலிலிருந்து ஏறத்தாழ 24-க்கும் அதிகமான பேர்கள் உயிர் துறந்திருக்கும் நெஞ்சுருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது. இதுபோன்ற விபத்துக்கள் இனி நடைபெறாத வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர் களுடைய குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாஜிஸ்டிரேட் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்ததும், நஷ்ட ஈட்டைப்பற்றி சர்க்கார் முடிவு செய்யும்.

4. அறிவிப்புகள்.

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு (Senate) 6—12—1968 முதல் திருத்தி அமைக்கப்படவேண்டியிருப்பதால் அக்குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களி லிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1—3—1969 சனிக் கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 3—3—1969 திங்கட்கிழமை பகல் 12 மணிக் குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3—3—1969 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற் படுமாயின் 5—3—1969 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பி னர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், "பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்" ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான நியமனத் தாள்கள் ஏற்கனவே பெறப் பட்டுள்ளன. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயரை நான் முதன் முதலில் அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்பின்வருமாறு :